4. கவன ஈர்ப்பு

குமரி மாவட்டம் குழித்துறை, தேவி குமரி மகளிர் கல்லூரியில் ஆசிரியைகள் நியமனம் செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. டி. மணி ஆகியோரில் ஒருவர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், குழித்துறையில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான தேவி குமரி மகளிர் கல்லூரியில் போதுமான ஆசிரியைகள் நியமனம் செய்யப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின்கீழ் ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர் தலைவராகவும், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் இணை ஆணையர்/செயல் அலுவலர் செயலராகவும், நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மொத்தம் 38 விரிவுரையாளர் பணி இடங்களும் மற்றும் 1 உடற்பயிற்சி ஆசிரியர், 1 நூலகர் பணியிடங்களும் உள்ளன.

மொத்த ஆசிரியர் பணியிடங்கள், அதில் காலியாக உள்ள பணியிடங்கள் மற்றும் காலியாகவுள்ள பணியிடங்களில் கல்லூரிக்

2001 செப்டம்பர் 6] [திரு. பி.சி. இராமசாமி]

கல்வி இயக்குநரால் பூர்த்திசெய்ய அனுமதிக்கப்பட்ட பணி இடங்கள் ஆகிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

பதவிப்பெயர்	மொத்தப் பணியிடங்கள்	காலியாக உள்ளவை	கல்லூரிக் கல்வி இயக்குநரால் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்பட்டவை
(1)	(2)	(3)	(4)
1. தமிழ்	3	2	—
2. ஆங்கிலம்	3	1	—
3. வேதியியல்	5	1	1
4. பொருளியல்	5	3	2
5. விலங்கியல்	5	1	—
6. தாவரவியல்	4	—	—
7. மலையாளம்	1	—	—
8. கணிதம்	5	—	—
9. இயற்பியல்	2	—	—
10. வணிகவியல்	4+1(பகுதி நேரம்)	—	—
11. வரலாறு	1	—	—
12. உடற்பயற்சி ஆசிரியர்	1	—	—
13. நூலகர்	1	1	1
மொத்தம்	**40+1=41**	**9**	**4**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள திருக்கோயில்களின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரிகளில் ஏற்படும் ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்திட அரசாணை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(நிலை) எண் 574, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 26-11-1999-ன் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பிக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை எதிர்த்து திரு. சுரேஷ்குமார் என்பவரால், சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண்.712/2000 தாக்கல் செய்து, இடைக்கால மனு 1068/2000 என்ற எண்ணில் 27-4-2000-ல் இடைக்காலத் தடை பெற்றுள்ளார். இத்தடையை நீக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்குரைஞர் ஆஜராகி வாதாடியபின் 27-8-2001 அன்று விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தீர்ப்பாணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தடையின் காரணமாக ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. கடந்த 30-8-2001 அன்று குழித்துறை மகளிர் கல்லூரி மாணவியர்கள் சுமார் 600 நபர்கள் குழித்துறை ஜங்ஷனில் போக்குவரத்தை தடை செய்துள்ளனர். பின் அவர்களிடையே சுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வட்டாட்சியர் மற்றும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் முயற்சியால் மாணவியரைக் கலைந்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கலைந்து சென்றுள்ளனர். 10 மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து விண்ணப்பம் அளிக்க அனுமதிக்கப்பட்டு அவ்வாறே மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரிடம் விரைவில் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய விண்ணப்பம் அளித்துள்ளனர்.

மேற்கண்ட நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து தீர்ப்பாணை பெறப்பட்டவுடன் உடனடியாகக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையே, மணிநேர அடிப்படையில் வேறு ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடத்தச் செய்து மாணவியர்களுக்கு உதவிட கல்லூரிச் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரமான அந்த அறிக்கையைப் படித்தேன். இந்த அரசும், இந்தத் துறையும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களும் வேகமாக அதிலே தலையிட்டு அதை நிறைவேற்றுவதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டதற்கு நான் முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே நான்கு ஆண்டுக் காலம், இந்த மாமன்றத்திலே அந்தத் துறையினுடைய அமைச்சருக்கு 10

2001 செப்டம்பர் 6] [திரு. டி. மணி]

கடிதங்கள் கொடுத்திருப்பேன். அந்தக் கல்லூரியிலே பல விவகாரங்கள் இருக்கின்றன. கட்டடப் பற்றாக்குறை இருக்கிறது, ஆசிரியைகள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் யாருடைய செவியிலே சங்கு ஊதினால் எப்படி இருக்குமோ, அந்த அளவிலேதான் நிலைமை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். நான் யாரையுமே குறை சொல்ல விரும்பவில்லை. அந்தக் கல்லூரியிலே 9 ஆசிரியைகள் இல்லையென்று சொன்னால், எப்படி ஒரு கல்லூரி செயல்பட முடியும்?

இப்போதுகூட, இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திலே கலந்துகொள்வதற்காக நான் வந்தபோது, எனக்கு இரண்டாவது நாள் இந்தத் தகவலைச் சொன்னார்கள். உடனே மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் இதைச் சொல்லி, அவர்களும் உரிய நடவடிக்கைக்கான முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே இருக்கிற அரசியல் காழ்ப்புணர்ச்சி உடையவர்கள் ஏதோ நான் இதைக் கண்டுகொள்ளவில்லை என்ற முறையிலே தவறான பிரசாரங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் மாவட்ட அதிகாரிகள் அதிலே கவனம் செலுத்தவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்பதைக்கூட நான் சுட்டிக்காட்டி உள்ளேன். அந்த 9 ஆசிரியைகளை நியமனம் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஏற்கெனவே Lab இல்லை என்ற காரணத்தால், மாணவிகள் அரை கிலோ மீட்டர் தாண்டி இன்னொரு பகுதிக்குச் செல்ல வேண்டிய துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடத்திலே நேரில் சொன்னதற்கு இணங்க, நேற்று முன்தினம் ஆணையர் அவர்களை அந்தக் கல்விக்கூடத்திற்கு அனுப்பி அங்கிருக்கிற பணிகளையெல்லாம் மேற்கொண்டு, அவர்கள் கூறிய குறைகள் அத்தனையும் அறிந்து வருமாறு சொல்லியிருக்கிறேன். 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்காமலேயே, தட்டாமலேயே உங்களுக்கு அந்தப் பணியைச் செய்ய இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.